# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண். 322/ந/2025, நாள் 22.01.2026**

P. மூர்த்தி
பல்லடம்,
திருப்பூர் மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

1) நகராட்சி ஆணையர்,
கருமத்தம்பட்டி நகராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

2) உரிமையாளர்,
ஸ்ரீஜெயராம் வே பிரிட்ஜ், சோமனூர்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

3) உரிமையாளர்,
ஸ்ரீ அம்மன் வே பிரிட்ஜ், சோமனூர்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

– எதிர்மனுதாரர்கள்

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், சோமனூர் வழி, இச்சிப்பட்டி அஞ்சல், தேவராயம்பாளையம், எண்.1/88 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. மூர்த்தி என்பவரது 29.08.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.09.2025 அன்று பெறப்பட்டு, 322/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், சோமனூர் வழி, இச்சிப்பட்டி அஞ்சல், தேவராயம்பாளையம், எண்.1/88 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. மூர்த்தி என்பவரின் 29.08.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"கோயம்புத்தூர் மாவட்டம், கருமத்தம்பட்டி நகராட்சி, சோமனூர் நகரின் ஊடே செல்கிற (காமநாயக்கன்பாளையம் To அன்னூர்) தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் இடையூறாகவும் உரிய அனுமதியின்றியும் சட்ட விரோதமாகவும் இயங்கி வருகிற, ஜெயராம் வே பிரிட்ஜ், ஸ்ரீ அம்மன் வே பிரிட்ஜ் ஆகிய இரண்டு எடை மேடைகளையும் அகற்றிடுமாறு கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையாளர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் முறையே 01.06.2024 மற்றும் 02.09.2024 ஆகிய தேதிகளில் புகார் அளித்து, ஓராண்டு காலம் கடந்தும் கூட மேற்கண்ட அலுவலர்கள் மேற்கண்ட புகார் மனுக்கள் மீது எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாத காரணத்தால்

மேற்கண்ட நகராட்சி நிர்வாகத்தின் செயலற்ற தன்மையையும், மெத்தனப்போக்கையும் சுட்டி 21.07.2025 அன்று கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு நினைவூட்டல் மனு அளித்தும், அனுமதியின்றி சட்டவிரோதமாக இயங்கிக் கொண்டிருக்கிற மேற்கண்ட 2 எடை மேடைகளையும் அகற்றிட, நாளது தேதி வரை எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் ஏதோ உள்நோக்கதோடு மேற்கண்ட கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையாளர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

மேன்மைமிகு உள்ளாட்சிகள் முறைமன்ற நடுவம் அவர்கள் இம்முறையீட்டினை பரிசீலனை செய்து, பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாகவும், அனுமதியின்றியும் சட்ட விரோதமாக இயங்கி வருகிற மேற்கண்ட ஜெயராம் வே பிரிட்ஜ், ஸ்ரீ அம்மன் வே பிரிட்ஜ் ஆகிய இரண்டு எடை மேடைகளையும் அகற்றிடவும்,

அரசு பணியை சரிவர செய்யாமல் மெத்தன போக்குடனும் அலட்சியமாகவும், உள்நோக்கத்துடன் செயல்பட்டு வருகிற கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையாளர் அவர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் உரிய உத்தரவுகள் வழங்குமாறு தங்களை பணிவுடன் வேண்டுகிறேன்."

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையினை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.09.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையரின் 08.10.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.001702/2025/எப்1–ல் மனுதாரர்களின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"புகார் மனுவில் திரு. மூர்த்தி என்பவர் கருமத்தம்பட்டியில் இருந்து சோமனூர் வழியாக செல்லும் பாதையில் ஜெயராம் வே பிரிட்ஜ் மற்றும் அம்மன் வே பிரிட்ஜ் ஆகிய இரண்டு எடை மேடைகள் இயங்கி வருகிறது. மேற்கண்ட எடை மேடைகளால் அவ்விடத்தில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது எனவும், எடைமேடை தொடர்பான இயக்கம் மற்றும் சரக்கு வாகனங்கள் கையாள்வதற்குரிய உள்கட்டமைப்பு வசதி மற்றும் எடை மேடைகளுக்கு வழங்கப்படும் உரிமம் தொடர்பாக தகவல்கள் வழங்க கோரியுள்ளார். ஆனால் எடைமேடைகளுக்கு உள்ளாட்சிகள் மூலம் உரிமம் வழங்கப்படுவதில்லை. சட்டமுறை எடையளவு துறை (Legal metrology department) மூலம் உரிமம் வழங்கப்படுகிறது.

இருப்பினும், மேற்கண்ட மனுவிற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், 1971 பிரிவு 56, 57–ன் கீழ் மனுதாரருக்கு 07.11.2024 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டு ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது.

மேலும், மேற்காணும் இரண்டு எடைமேடைகளும் வணிகப்பயன்பாட்டிற்கு கட்டிட உரிமம் பெற்று வணிக பயன்பாட்டிற்கு வரிசெலுத்தி வருகின்றனர். மேற்கண்ட தகவல்கள் மட்டுமே உள்ளாட்சி வசம் உள்ளது. எடைமேடைகளுக்கு உள்ளாட்சிகள் மூலம் உரிமம் வழங்கப்படுவதில்லை. மேலும், இதுதொடர்பாக இரண்டு எடை மேடை உரிமையாளர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், ஜெயராம் எடைமேடை மற்றும் ஸ்ரீ அம்மன் எடை மேடை உரிமையாளர்களின் கடிதத்தில் இரண்டு எடைமேடைகளும் 20 வருடங்களாக இயங்கி வருவதாகவும், Tamilnadu Legal Metrology (Enforcement) Rules, 2011–யின் படி முறையாக அனுமதி வழங்கியுள்ளதாகவும், தற்போது வரை அனுமதி புதுப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்னர்.

மேலும், மனுதாரர் மூர்த்தி என்பவர் இது போன்று சில பிரச்சனைகளை முன்வைத்து திருப்பூர் மாவட்டம், பல்லடம் பகுதிகளில் உள்ள சிறு வியாபாரிகளிடம் பணம் பறிக்கும் நோக்கத்தில் வேண்டுமென்றே பொய்யான புகார்களை வழங்கியுள்ளதாகவும், இது தொடர்பாக வியாபாரிகள் பல்லடம் காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். மேலும் மேற்கண்ட இரண்டு எடைமேடைகளுக்கு Deputy Inspector, Labour அலுவலரே – இயக்கம் தொடர்பான நடவடிக்கை எடுக்க இயலும் என்பதால் மேற்கண்ட மனுவின் மீது மேல்நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட தொழிலாளர் நலத்துறை, கோவை, அவர்களுக்கு கடிதம் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது."

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், 1971 பிரிவு 56, 57 இன் கீழ் மேற்படி இரண்டு எடை மேடை உரிமையாளர்களுக்கும் 07.01.2024 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டு, ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டதில், இரண்டு எடைமேடைகளும் வணிகப் பயன்பாட்டிற்கான கட்டிட உரிமம் பெற்று வணிகப்பயன்பாட்டிற்கான வரி செலுத்திவருவது தெரியவருகிறது.

(1) ஜெயராம் எடைமேடை மற்றும் (2) ஸ்ரீ அம்மன் எடைமேடை ஆகிய இரு எடைமேடைகளின் உரிமையாளர்களின் கடிதத்தில் இரண்டு எடைமேடைகளும் 20 வருடங்களாக இயங்கி வருவதாகவும், Tamil Nadu Legal Metrology (Enforcement) Rules, 2011-ன்படி முறையாக அனுமதி பெறப்பட்டு, தற்போது வரை அனுமதி புதுப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது தொடர்பாக மனுதாரரின் மனு போக்குவரத்து காவல் துறை, தொழிலாளர் நலத்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரர் இதுபோன்று சில பிரச்சனைகளை முன்வைத்து திருப்பூர் மாவட்டம், பல்லடம் பகுதிகளில் உள்ள சிறு வியாபாரிகளிடம் பணம் பறிக்கும் நோக்கத்தில் வேண்டுமென்றே பொய்யான புகார்களை வழங்கியுள்ளதாகவும், இது தொடர்பாக வியாபாரிகள் பல்லடம் காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் புகாருக்குள்ளானவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி புகார் மனுவில் உண்மைதண்மையில்லை என்பதாலும், மனுதாரர் உள்நோக்கத்துடன் புகார் அளித்துள்ளதாலும், மேற்படி புகார் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளனர்.

7. இரண்டாவது எதிர்மனுதாரரான ஸ்ரீஜெயராம் வே பிரிட்ஜ் உரிமையாளர் மற்றும் அவரது வழக்கறிஞர் திரு. எம். பழனிச்சாமி ஆகியோர் 27.11.2025 அன்று கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர். அதில் –

"ஜெயராம் வேயிங் பிரிட்ஜ் நிறுவனம் 23 வருடங்களாக இயங்கி வருகிறது. போக்குவரத்து நெரிசல் இதுநாள் வரையில் ஏற்பட்டதில்லை.

இந்த நிறுவனத்திற்கு வணிகரீதியிலான வரி முறையாக செலுத்தப்பட்டு வருகிறது.

இந்தப் பகுதியில் குடியிருப்புகள் ஏதுமில்லை. அதன் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை.

எதிர்மனுதாரர் சார்பாக ஆவணங்கள் 1 முதல் 10 வரை தாக்கல் செய்துள்ளேன். மேலும் எதிருரை தாக்கல் செய்துள்ளேன்.

மனுதாரர் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவே இவ்வாறான குற்றச்சாட்டுக்களை அடிக்கடி ஏற்படுத்தி சிரமம் அளித்து வருகிறார். மேலும் மனுதாரர் பண ஆதாயத்திற்காக உள்நோக்கத்தில் பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளனர்.

8. மூன்றாவது எதிர்மனுதாரரான ஸ்ரீ அம்மன் வே பிரிட்ஜ் உரிமையாளர் மற்றும் அவரது வழக்கறிஞர் திரு. வி. சதீஸ்குமார் ஆகியோர் 27.11.2025 அன்று கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர். அதில் –

"அம்மன் வேயிங் ப்ரிட்ஜ் நிறுவனம் 15 வருடங்களாக இயங்கி வருகிறது. இப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படவில்லை.

இந்த நிறுவனத்திற்கு வணிகரீதியிலான வரி முறையாக செலுத்தப்பட்டு வருகிறது.

4. மனுதாரர், முதல் எதிர்மனுதாரான கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையர், இரண்டாவது எதிர்மனுதாரான ஸ்ரீ ஜெயராம் வே பிரிட்ஜ் உரிமையாளர் மற்றும் மூன்றாவது எதிர்மனுதாரான ஸ்ரீ அம்மன் வே பிரிட்ஜ் உரிமையாளர் ஆகியோரை 27.11.2025 அன்று கோயம்புத்தூர் அரசு விருத்தினர் மாளிகையில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 23.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 27.11.2025 அன்று கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.அதில் –

"1. கோயம்புத்தூர் மாவட்டம், கருமத்தம்பட்டி நகராட்சி சோமனூர் நகரின் ஊடே செல்கிற காமநாயக்கன்பாளையம் To அன்னூர் தேசிய நெடுஞ்சாலையில் உரிய அனுமதியின்றியும், சட்ட விரோதமாகவும், இயங்கிவருகிற ஜெயராம் வே பிரிட்ஜ், ஸ்ரீ அம்மன் வே பிரிட்ஜ் ஆகிய இரண்டு எடை மேடைகளால் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுவதால், அவற்றை அகற்றிடுமாறு கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையாளர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் புகார் அளித்து ஓராண்டு காலம் கடந்தும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2. மேற்கண்ட நகராட்சி நிர்வாகத்தின் செயலற்ற தன்மையையும், மெத்தனப் போக்கையும் சுட்டிகாட்டி 21.07.2025 அன்று கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு நினைவூட்டல் மனு அளித்தும் அனுமதியின்றி சட்ட விரோதமாக இயங்கி வரும் 2 எடை மேடைகளையும் அகற்றிட எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் உள்ளது. மேற்கண்ட இரண்டு எடை மேடைகளும் குடியிருப்பு பகுதியில் இயங்கி வருகிறது. எடை மேடைகளுக்கு வரும் கனரக வாகனங்கள் உள்ளே செல்வதற்கு மட்டும் வழிவகை உள்ளது. எடைமேடைகளிலிருந்து வாகனங்கள் திரும்பி வெளியே வருவதற்கு வழிகள் ஏதும் இல்லாததால், வாகனங்கள் பின்னோக்கி நகர்ந்து நெடுஞ்சாலையின் குறுக்கே வருவதால் கடுமையான போக்குவரத்து நெருக்கடியும் விபத்துகளும் ஏற்படுகிறது. மேற்கண்ட எடைமேடைகள் அமைப்பதற்குரிய உள்கட்டமைப்பு வசதி மேற்கண்ட எடை மேடைகள் அமைந்துள்ள இடத்தில் இல்லை. மேற்கண்ட எடை மேடைகள் தொடர்பான பட்டா வில்லங்க சான்று, புகைப்படம் நிலப்பயன் (Land classification) தொடர்பான அரசு துறை ஆவணங்களை தங்கள் முன் தாழ்மையுடன் சமர்ப்பிக்கிறேன்.

3. எனது முறையீட்டு மனுவை பரிசீலித்து பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறாகவும், அனுமதியின்றியும் சட்ட விரோதமாக இயங்கிவரும் ஜெயராம் வே பிரிட்ஜ் மற்றும் ஸ்ரீ அம்மன் வே பிரிட்ஜ் ஆகிய இரண்டு எடை மேடைகளை அகற்றிடவும், மெத்தன போக்குடன் அலட்சியமாக செயல்படும் கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையாளர் மீது துறைரீதியான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரரான கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையரின் கடித ந.க.எண்.9160/2024/F1, நாள் 26.11.2025–ல் தேர்தல் தொடர்பான (SIR) சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மற்றும் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டம் நடைபெறயிருப்பதாலும் 27.11.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு நேரில் ஆஜராக இயலவில்லை என்பதால் கருமத்தம்பட்டி நகராட்சியில் பணிபுரிந்து வரும் நகரமைப்பு ஆய்வாளர் திருமதி.க.சுதர்ஷினி என்பவரை கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில் 27.11.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் ஆஜராகுவதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, கருமத்தம்பட்டி நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திருமதி.க.சுதர்ஷினி மற்றும் இளநிலை உதவியாளர் திருமதி இ. ஜெயலட்சுமி ஆகியார் 27.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தங்களது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

"மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள கருமத்தம்பட்டியில் இருந்து சோமனூர் வழியாக செல்லும் பாதையில் செயல்பட்டுவரும் 1. ஜெயராம் வே பிரிட்ஜ் மற்றும் 2. அம்மன் வே பிரிட்ஜ் ஆகிய இரண்டு எடை மேடைகள் சட்டமுறை எடையளவு துறை (Legal metrology) மூலம் உரிமம் பெற்று இயங்கிவருகிறது. இவற்றிற்கு உள்ளாட்சிகள் மூலம் உரிமம் வழங்கப்படுவதில்லை.

இந்தப் பகுதியில் குடியிருப்புகள் ஏதுமில்லை. இருப்பினும் எனது வீடு மட்டுமே அங்கு உள்ளது. இந்த நிறுவனம் இயங்குவதால் பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

மனுதாரர் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இவ்வாறான குற்றச்சாட்டுக்களை அடிக்கடி ஏற்படுத்தி சிரமம் அளித்து வருகிறார் என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளனர்.

9. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், முதலாவது எதிர்மனுதாரரான கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம், இரண்டாவது எதிர்மனுதாரர், அவரது வழக்கறிஞர் மற்றும் மூன்றாவது எதிர்மனுதாரர், அவரது வழக்கறிஞர் ஆகியோரின் வாக்குமூலங்கள் மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட காமநாயக்கன்பாளையம் முதல் அன்னூர் தேசிய நெடுஞ்சாலையில், எடைமேடைகள் அமைப்பதற்கான உள்கட்டமைப்பு வசதி இல்லாமல், அனுமதியின்றி, சட்ட விரோதமாக குடியிருப்பு பகுதியில் ஜெயராம் வே பிரிட்ஜ் மற்றும் ஸ்ரீ அம்மன் வே பிரிட்ஜ் ஆகிய இரு எடை மேடைகள் இயங்கி வருகிறது எனவும், கனரக வாகனங்கள் எடை மேடைகள் அமைந்துள்ள இடத்திற்கு உள்ளே செல்வதற்கான வழிகள் மட்டும் உள்ளதால், வெளியே செல்வதற்கான வழிகள் இல்லாததால், வாகனங்கள் பின்னோக்கி நகர்ந்து நெடுஞ்சாலையின் குறுக்கே வருவதால் கடுமையான போக்குவரத்து நெருக்கடியும், விபத்துகளும் ஏற்படுகிறது எனவும் தெரிவித்து பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள மேற்படி இரு எடை மேடைகளை அகற்றிட மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பது தெரியவருகிறது.

எடை மேடைகளுக்கு உள்ளாட்சிகள் மூலம் உரிமம் வழங்கப்படுவதில்லை எனவும், எடை மேடைகளுக்கான உரிமம் சட்டமுறை எடையளவு துறை (Legal Metrology) மூலம் வழங்கப்படுகிறது எனவும், ஜெயராம் வே பிரிட்ஜ் மற்றும் அம்மன் வே பிரிட்ஜ் ஆகிய இரு எடை மேடை உரிமையாளர்களின் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டதில், மேற்படி எடைமேடைகள் வணிகப் பயன்பாட்டிற்கான கட்டிட உரிமம் பெற்று வணிகப்பயன்பாட்டிற்கான வரி செலுத்திவருகிறது என்பதும், போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது தொடர்பாக மனுதாரரின் மனு போக்குவரத்து காவல் துறை, தொழிலாளர் நலத்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதும், எடைமேடைகள் தொடர்பான நடவடிக்கைகள் Deputy Inspector, Labour அலுவலகம் மூலம் மேற்கொள்ள வேண்டும் என்பதால், புகார் மனு மாவட்ட தொழிலாளர் நலத்துறை, கோவை, அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதும், உண்மைதன்மை இல்லாத புகார் மனுவை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், முதலாம் எதிர்மனுதாரரான கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

ஜெயராம் வேயிங் பிரிட்ஜ் நிறுவனம் 23 வருடங்களாக இயங்கி வருகிறது என்பதும், அப்பகுதியில் குடியிருப்புகள் ஏதும் இல்லாததால் இதுநாள் வரை போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதில்லை என்பதும், வணிகரீதியிலான வரி முறையாக செலுத்தப்பட்டு வருகிறது என்பதும், மனுதாரர் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய்யான குற்றச்சாட்டுக்களை அடிக்கடி ஏற்படுத்தி சிரமம் அளித்து வருகிறார் என்பதும், இரண்டாவது எதிர்மனுதாரரான ஜெயராம் வேயிங் பிரிட்ஜ் நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் அவரது வழக்கறிஞர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

அம்மன் வேயிங் ப்ரிட்ஜ் நிறுவனம் 15 வருடங்களாக இயங்கி வருகிறது என்பதும், அப்பகுதியில் உரிமையாளரின் வீட்டை தவிர பிற குடியிருப்புகள் ஏதும் இல்லாததால் பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதும், வணிகரீதியிலான வரி முறையாக செலுத்தப்பட்டு வருகிறது என்பதும், மனுதாரர் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இவ்வாறான குற்றச்சாட்டுக்களை அடிக்கடி ஏற்படுத்தி சிரமம் அளித்து வருகிறார் என்பதும், மூன்றாவது எதிர்மனுதாரரான அம்மன் வே பிரிட்ஜ் நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் அவரது வழக்கறிஞர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில், எடைமேடைகளுக்கு உள்ளாட்சிகள் மூலம் உரிமம் வழங்கப்படுவதில்லை எனவும், புகாருக்குள்ளான ஜெயராம் வே பிரிட்ஜ் மற்றும் ஸ்ரீ அம்மன் வே பிரிட்ஜ் ஆகிய இரு எடை மேடைகளும் வணிகப் பயன்பாட்டிற்கான கட்டிட உரிமம் பெற்று Tamil Nadu Legal Metrology (Enforcement) Rules, 2011-ன்படி முறையாக அனுமதி பெற்று, தற்போது வரை அனுமதி புதுப்பிக்கப்பட்டு, வணிகப்பயன்பாட்டிற்கான வரி செலுத்திவருகிறது எனவும், போக்குவரத்து நெரிசல் தொடர்பாக காவல்துறைக்கும், மனுதாரரின் புகார் மீது நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட தொழிலாளர் நலத்துறைக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரரான கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதை ஏற்று இப்புகார் மனுமீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 22–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. P. மூர்த்தி,
   எண்.1/88, தேவராயம்பாளையம்,
   இச்சிப்பட்டி அஞ்சல், சோமனூர் வழி,
   பல்லடம் வட்டம், திருப்பூர்– 641 668,
   திருப்பூர் மாவட்டம்.
2. நகராட்சி ஆணையர்,
   கருமத்தம்பட்டி நகராட்சி,
   கோயம்புத்தூர் மாவட்டம்.
3. உரிமையாளர்,
   ஸ்ரீ ஜெயராம் வேபரிட்ஜ்,
   3634, மெயின் ரோடு,
   சோமனூர்–641668, கோயம்புத்தூர் மாவட்டம்.
4. உரிமையாளர்,
   ஸ்ரீ அம்மன் வேபரிட்ஜ்,
   37(1), மெயின் ரோடு,
   இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்க் (எதிரில்)
   சோமனூர், கோயம்புத்தூர் மாவட்டம்.
5. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.
6. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

28/1/26

செயலாளர்.

28/1/26